

ஸ்ரீ காஞ்சீ காமகோடி மூலாம்நாய ஸர்வஜ்ஞ பீடம் பஞ்சாங்க ஸதஸ்

# ப்லவ ௵ கார்த்திகை மீ பௌர்ணமி (2021-நவ-19)


# சந்த்ர க்ரஹண அனுஷ்டானம் கிடையாது

கார்த்திகை மீ 1 உ ஶுக்ல த்ரயோதஶீ (2021-நவ-16)

பொதுவாக அனைத்து பஞ்சாங்கங்களிலும் ப்லவ ௵ க்ரஹணங்கள் எதுவும் கிடையாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதை ஒட்டி வருடாரம்ப பஞ்சாங்க படன நிகழ்ச்சிகளிலும் அவ்வாறே சொல்லப்பட்டது. சில பஞ்சாங்கங்களில் வடகிழக்கு பாரதத்தில் க்ரஹணம் உண்டு என்ற குறிப்பு உள்ளது. அண்மையில் ஊடகங்களிலும் க்ரஹணம் உண்டு என்ற தகவல் வெளிவந்துள்ளதால் இதை குறித்த குழப்பத்தை நீக்க இந்த விளக்கம் வெளியிடப்படுகிறது.

வரவிருக்கும் கார்த்திகை பௌர்ணமி அன்று சந்த்ர க்ரஹணம் பாரதீய ப்ரமாண நேரத்தின்படி பிற்பகல் 12:49 க்கு ஆரம்பித்து மாலை 16:17 க்கு முடிகிறது. பூமியின் புறநிழலில் சந்த்ரன் புகுந்து வெளிவருவதைக் கொண்டு 11:32 முதல் 17:33 வரை க்ரஹணம் என்று பிற ஊடகங்களில் கூறியிருந்தால் அதற்கு ஶாஸ்த்ரப்படி மதிப்பு அளிக்க இயலாது, ஏனெனில் புறநிழல் க்ரஹணம் இயந்திரங்களுக்கு மட்டும் புலப்படும், கண்ணுக்கு புலப்படாது ஆகையால் அதனை அனுஷ்டானத்திற்கு விஷயமாக ஶாஸ்த்ரம் ஏற்கவில்லை.

மேலும் 12:49 முதல் 16:17 வரை க்ரஹண காலம் என்று பார்க்கையில் இது கிட்டதட்ட அனைத்து ஊர்களிலும் பகல் வேளைக்குள் அடங்கிவிடுகிறது. பகலில் ஏற்படும் சந்த்ர க்ரஹணம் நமக்கு தெரியவே வாய்ப்பு கிடையாது. பௌர்ணமி அன்று ஸூர்ய அஸ்தமன நேரத்தை ஒட்டி தான் சந்த்ரன் உதயமாவார். ஆகவே சந்த்ரன் தெரியாத போது சந்த்ரனின் க்ரஹணமும் தெரிய வாய்ப்பில்லை. ஆகவே அனுஷ்டானம் கிடையாது.




மேலே கொடுக்கப்பட்டுள்ள வரைபடத்தின்படி பாரதத்தின் வடகிழக்கு கோடியில் உள்ள மிகச்சிறிய பகுதி (கறுப்பு இல்லாத இடங்கள்) மட்டுமே 16:17 க்கு முன்பே ஸூர்ய அஸ்தமனமும் சந்த்ர உதயமும் ஏற்படுகிறது. மிகவும் கிழக்கே பாரத-சீன-மியான்மார் எல்லையருகே உள்ள கிபித்து, தோங் போன்ற சில கிராமங்களில் 16:11 க்கு சந்த்ர உதயம் ஏற்படுகிறது. ஆகவே அங்கு அப்போது க்ரஹணம் தெரியலாமோ என்ற கேள்வி வரலாம். ஆனால் அப்போது கூட க்ரஹண பரிமாணம் 7.7% மட்டுமே. அடுத்த சில நிமிடங்களிலோ க்ரஹணம் முடிந்து விடுகிறது.

ஸூர்ய ஸித்தாந்தம் சேத்யக அதிகாரத்தில் 13 ம் செய்யுளில் “சந்த்ரனின் பன்னிரண்டில் ஒரு பங்கு மட்டுமே க்ரஸ்தமானால் தெரியாது” என்றுள்ளது. அதாவது 8.3% பங்குக்கு குறைவானால் க்ரஹணம் தெரியாது.

ஆகவே இந்த எல்லை ஊர்களிலும் கூட க்ரஹண அனுஷ்டான வாய்ப்பு இல்லை. ஆகவே பாரத்ததில் எங்குமே க்ரஹண அனுஷ்டானம் கிடையாது.

இப்படிக்கு,

பஞ்சாங்க ஸதஸ் நிர்வாஹம்,

ஸ்ரீ காஞ்சீ காமகோடி மூலாம்நாய ஸர்வஜ்ஞ பீடம்



Shri Kanchi Kamakoti Mulamnaya Sarvajna Peetam Panchanga Sadas


# No chandra grahana anushthanam on Plava Kartika Purnima (2021-Nov-19)

Kartika Shukla Trayodashi (2021-Nov-16)

Generally in all panchangas it has been announced that there is no grahanam in Plava year. Based on this, the same was said even in panchanga pathanam programmes at the commencement of the year. Some panchangams have a note that grahanam is there in northeastern Bharat. Recently in media there have been reports that there will be a grahanam. This explanation is given to remove the confusion.

The grahanam on forthcoming Kartika Purnima starts afternoon 12:49 and ends evening 16:17 as per Indian Standard Time. If other media have said that eclipse is from 11:32 to 17:33 based on the entry and exit of the moon into the earth's penumbra, we cannot give that importance as per shastra. This is because penumbral eclipses are visible only to instruments and not the eye. Thus the shastra doesn't take it as a matter for anushthanam.

Further considering the grahana time 12:49 to 16:17 this is over within daytime in almost all places. There is no chance for a lunar eclipse to be visible in the daytime. On Purnima, the moon rises only near sunset. Thus when the moon is not visible, the grahana of the moon is also not visible. Thus there is no anushthanam.




Sunset and moonrise occur before 16:17 in only a small part of northeastern Bharat (the places without darkening) as per the map given above. Moonrise occurs at 16:11 in some easternmost villages such as Kibithu and Dong near the Bharat-China-Myanmar border. Thus one may wonder if the grahanam may be visible there. However even then the grahanam magnitude is only 7.7%. The grahanam is over within the next few minutes.

In the Surya Siddhanta Chedyaka Adhikara verse 13 it is said “if only one-twelfth of the moon is eclipsed it cannot be seen”. That is, if the grahanam is less than 8.3% it will not be visible.

Thus there is no chance for grahana anushthanam even in these border places. Thus nowhere in Bharat is grahana anushthanam to be done.

Thus,

Panchanga Sadas Administration,

Shri Kanchi Kamakoti Mulamnaya Sarvajna Peetam